# DIOCESAN CIRCULAR LETTERS

No. C-01/2026 13.01.2026

## பணி நிறைவுப்பெற்ற அருள்பணியாளர்களுக்கான புதிய இல்லக் கட்டுமானப் பணிக்கு இறைமக்களின் உதவி வேண்டி...

கிறிஸ்து இயேசுவில் அன்பிற்கினிய இறைமக்களே!

திருஅவை என்பது ஆயர்கள், அருள்பணியாளர் எனப் பணிநிலை இறைமக்களும் பொதுநிலை இறைமக்களும் இணைந்த இறைமக்கள் சமூகம். தொடக்க முதல் இன்று வரை திருஅவையின் வாழ்விலும் வளர்ச்சியிலும் பொதுநிலையினரின் பங்கேற்பும் பங்களிப்பும் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கி இருக்கிறது.

நமது மறைமாவட்ட வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் புதிய கட்டமைப்புகளை உருவாக்கும்போது நிதித்தேவை இன்றியமையாதது. தற்கால அரசியல் பொருளாதார சூழல்களால் அயல்நாடுகளில் இருந்து உதவிக்கரம் நீட்டிய நல்லுள்ளங்கள் வழியாக நமக்குக் கிடைத்து வந்த நிதி உதவிகள் படிப்படியாகக் குறைந்து வருகிறது. இக்கட்டான இச்சூழலில் நமக்கான கட்டமைப்புகளை உருவாக்க நாமே முழுப் பங்களிப்பையும் செய்ய வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

### பணி நிறைவுப்பெற்ற அருள்பணியாளர்களுக்கான புதிய இல்லம்

நமது மறைமாவட்ட பங்குகளின் வளர்ச்சிக்கும், இறைமக்களின் ஆன்மீக, சமூக வாழ்வுக்கும் தமது வாழ்வை முழுவதும் அர்ப்பணித்தவர்கள் நமது பணி நிறைவுப்பெற்ற அருள்பணியாளர்கள். அவர்களின் ஓய்வுக் காலத்தில் அவர்களைப் பராமரிக்க உருவாக்கப்பட்ட அருள்பணியாளர்கள் இல்லம் மிகவும் பழுதடைந்த நிலையில், புதிய கட்டிடத் தேவை நம் முன் உள்ளது. இப்பணியை விரைந்து முடிக்க வேண்டிய கட்டாயச் சூழலும் ஏற்பட்டுள்ளது. நமக்காகவும் திருஅவைக்காகவும் உழைத்த பணி நிறைவுப்பெற்ற நமது அருள்பணியாளர்கள் தமது வயது முதிர்ந்த காலத்தில் அமைதியிலும் ஓய்விலும் வாழ அவர்களுக்காகப் “புதிய அருள்பணியாளர்கள் இல்லம்” கட்டும் பணியை முன்னெடுக்க இருக்கிறோம்.

இப்பணியை இறைமக்களாகிய உங்களின் முழுமையான பங்கேற்பும் பங்களிப்பும் இல்லாமல் நிறைவு செய்ய இயலாது. எனவே, இறைமக்களாகிய உங்கள் மீது நம்பிக்கை வைத்து நிதித் திரட்டும்

பணியை அருள்பணியாளர்கள், பொதுநிலை இறைமக்கள் வழியாக முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளேன். வரும் நாட்களில் இப்பணிக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள குழுவைச் சார்ந்த அருள்பணியாளர்களும் பங்கேற்பு அமைப்புகளை சார்ந்த அன்பர்களும் ஞாயிறு திருப்பலியில் கலந்து கொண்டு இது குறித்த கூடுதல் விளக்கங்கள் தந்து உங்களிடம் நிதி உதவி கோருவார்கள்.

பங்கு அருள்பணியாளர்கள், அருள்பணிப் பேரவையினர் அத்தோடு பங்கின் அனைத்துப் பங்கேற்பு அமைப்பினர் இணைந்து மறைமாவட்டத்தின் இப்பணிக்குத் தாராளமாய் உதவிட அன்பாய் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மூத்த அருள்பணியாளர்களின் அர்ப்பண வாழ்வுக்கு நன்றி செலுத்தும் விதமாக அருள்பணியாளர்கள் இல்லக் கட்டிடப் பணிக்குத் தாராள மனதோடு நிதி உதவி வழங்கிட உங்களை அன்புடன் வேண்டுகிறேன். உங்களது பங்களிப்பிற்கான வங்கி விபரங்கள் இம்மடலோடு இணைக்கப்பட்டுள்ளது. தேவைப்படின், பங்கு அருள்பணியாளரை அணுகிட அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இறைவன் உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் பங்கிற்கும் நிறைவாக ஆசி வழங்குவாராக!

“ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள் உங்களோடு இருப்பதாக!” (பிலி 4:23)

*கிறிஸ்துவின் மனநிலையில்,*

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**

(கோட்டாறு மறைமாவட்டம்)

| | | |
|---|---|---|
| Account Holder | : | **R.C. Diocese of Kottar** |
| Account Number | : | **005305300004334** |
| Name of the Bank | : | **South Indian Bank, Nagercoil Branch** |
| IFSC Code | : | **SIBL0000053** |

---

**குறிப்பு :** இச்சுற்றுமடல் **18.01.2026, ஞாயிறன்று** அறிவிப்பின் போது வாசிக்கப்பட வேண்டும்.